உ

# வல்லவாம்பிகா
# ஸ்ரீ தையல்நாயகி சமேத
# வைத்தியநாத சுவாமி



# திரு ஊஞ்சல் பதிகம்

ஆக்கியோன் : சண்முகம் நடராஜா, வல்வெட்டி

வெளியிடுவோர்: சைவநெறி மன்றம்
ஒட்டாவா சிவன் கோயில்

முதலாவது பதிப்பு : ஜூலை 2010
இரண்டாவது பதிப்பு : ஜூலை 2011
மூன்றாம் பதிப்பு : மார்ச் 2018

## லாலி

வானவர்கள் புகழ்ந்தேத்தும் வளர்ஒட் டாவாசேர்ந்த
தேனே – எமைக்காக்குந் திரவியமே – லாலி லாலி
தானவனப் பாதிமதி – தலையணிந்த நாயகமே!
தையல் நாயகிசேர்ந்த – தற்பரனே – லாலி லாலி
கானமுனி புங்கவர்கள் கைதொழுது தேடிவரும்
ஞான முழுமுதலே! நாதா – லாலி லாலி
ஈனர்களின் கொடுமையினால் இழிவுபட்ட எம்மவரின்
மானமதைக் காத்தருள்வாய் – வைத்தீசா – லாலி லாலி

## மங்களம்

ஒற்றாவா உறைந்தருளும் தேவனுக்கு மங்களம்
உமையவளை இடதுபாகம் கொண்டவர்க்கு மங்களம்
கற்றவர்கள் ஏத்துவைத் தீஸ்வரர்க்கு மங்களம்
கல்லை வில்லாய்க் கொண்ட எங்கள் கண்மணிக்கு மங்களம்
சிற்றறிவுத் தக்கன்வேள்வி சிதைத்தவர்க்கு மங்களம்
தேவாதி தேவர்தொழும் தேவனுக்கு மங்களம்
குற்றமில்லாக் குணக்க்ன்றே! கோமகனே! மங்களம் – எங்கள்
குலங்காக்கும் நாயகனே! கோடி கோடி மங்களம்!

**நமப்பார்பதி பதயே!**
**தென்னாடுடைய சிவனே போற்றி!**
**இன்பமே சூழ்க!**



**உ**
**சிவமயம்**
**கணபதி துணை**



நீர்வளமும் நிலவளமும் சீர்வளமும் திருவளமும்
வந்தாரை வாழவைக்கும் மனவளமும்
கொண்ட கனடா பெரும் நாட்டின்
தலைப்பட்டினமாம் ஒட்டாவாத் திருநகரில்
வட கௌதம் பிரதேசத்தில்
இனிதமர்ந்து அருளாட்சி செய்துவரும்

**ஸ்ரீ வாலாம்பிகை தையல்நாயகி சமேத**
**வைத்தீஸ்வரப் பெருமான்மீது**

# # திரு ஊஞ்சல் பாக்கள் #

**ஆக்கியோன்: சண்முகம் நடராஜா**

உ

## சிவமயம்



## காப்பு

பாரோங்கு ஊஞ்சற்பா நானும் பாட
பண்ணேந்தி நாமகளென் நாவில் ஓங்க
காரோங்கு மலம் நீக்கி ஆளும்
கணபதி!! நின் கழல் அடிகள் காப்பதாமே

## ஊஞ்சல்

திருமேவும் மாணிக்க கம்பம் நாட்டிச்
சிறந்தனவாம் வைரத்தால் விட்டம் நீட்டிச்
குருமேவு கிளிச்சிறைப் பொற் கயிறு பூட்டிக்
குணம்மேவு மரகதப் பொன் பலகை மாட்டி
அருள்மேவும் பொன்னுலக மகளிர் கூடி
அற்புதமாய் இசைபாடி ஆட்டம் மேவ
உருமேவுந் தையல் நாயகி யினோடு
ஒட்டாவா வைத்தீஸ் வரரே ஆடீருஞ்சல்!

[1]



பித்தா! பிறைசூடி! பெம்மானே! அருள்புரியும்
நித்தா! மறைமுதலாகிய நிமலா! எச்சரீக்கை!
ஒட்டாவா மக்கள்தொழும் உம்பர் அதிபதியே
தட்டாதெமைக் காக்குந் தனிமுதலே! எச்சரீக்கை
சத்தோடுசித் தானந்தமாம் தவமே! எம்மினத்தின்
வித்தாகிய அத்தா! வினை தீர்ப்பாய் எச்சரீக்கை
உத்தமிவா லாம்பிகையோ டொன்றாய் இணைந்தவனே
சித்தா! வைத்தீசா! எம்சிவமே! எச்சரீக்கை!

[2]

## பராக்கு

வரமருளும் நாயகனே! வரதா! பராக்கு!
மாலயந்தான் தேடிநின்ற மாமுதலே! பராக்கு!
கரவறியார் தமைக்காக்குங் கண்மணியே! பராக்கு!
கையில் மான்கன்றேந்தும் கர்த்தா! பராக்கு!
அரவா பரணமணி ஐயா! பராக்கு!
அடியவர்க்கு அருள்புரியும் அத்தா! பராக்கு!
மருவாருங் கொன்றைபுனை மாதவனே! பராக்கு!
வாலாம்பிகை சமேத வைதீஸ்வரா! பராக்கு!

ஆவாழ வேதசிவா கமங்கள் வாழ
அருமறையோர் அறிஞர்கள்தான் நீடுவாழ
பூவாழ் இக்கோவிற்பற் றதனைச் சார்ந்த
புகழுங்கத் தவரெல்லாஞ் சுற்றத்தோடு
மேவாழ மெய்யடியார் கூட்டம் வாழ
எழிற்புலவர் வாழஇவண் இனிதுமேவும்
மாதுமையாள் தையல்நாய கியினோடு
வளர்ஒட்டாவா வைத்தீஸ்வரரே! ஆடீரூஞ்சல்!

[8]

## எச்சரீக்கை

சீரார் ஒட்டாவா திருப்பதிசேர் ஈசுவரா!
நேரானதையல் நாயகி நேசா! எச்சரீக்கை!
வாராது வந்தமர்ந்த வண்ணச் செழுஞ்சுடரே!
கூறாதெமைக் காக்குங் கொற்றவனே! எச்சரீக்கை
பேரதனைக் கடந்துநிற்கும் பெரியவனே! எங்களினம்
வேரோடு தான்வாழ வேண்டுமையா எச்சரீக்கை
பாரோடு விண்ணாய்ப் பரந்த திருவிளக்கே!
யாருமே ஏத்திநிற்கும் வைத் தீசுவராஎச்சரீக்கை!

[1]



பொன்னாரும் நாத விந்து கால்களாகப்
பொலிவாருஞ் சக்தி சுடர் விட்டமாக
எந்நாளுந் தந்திரங்கள் இழைய தாக
எழிலாருஞ் சதுர் மறைகள் கயிறதாக
மின்னாரும் உப நிடதம் பலகையாக
விளங்கு பிரவணபீடம் மீதில் மேவி
உண்ணாமுலைத் தையல் நாயகி யினோடு
ஒட்டாவா வைத் தீஸ்வரரே ஆடீரூஞ்சல்!

[2]

கண்ணன்விழி நீர்சொரிந்து களிப்பால் ஆட
கமலமலர் அயன்வேதம் பாடி ஆட
விண்ணுறையுந் தேவர் மலர் தூவியாட
வேதமுணர் முனிவரெல்லாம் வாழ்த்தி ஆட
பண்ணிசைத்து அரம்பைஊர் வசியும் ஆட
பார்வியக்குங் கணம்பூதம் துள்ளி ஆட
தென்னாடுபோற்று தையல் நாயகி யினோடு
திகழ் ஒட்டாவா வைதீஸ்வரரே ஆடீரூஞ்சல்!

[3]

முனிமகனை வெகுண்டு வந்த காலன்தன்னை
முன்னுதைத்த அடியுடையீர்! ஆடீர் ஊஞ்சல்
பனிவரைசேர் கங்கை யவள் சீற்றந் தன்னைப்
பணியவைத்த முடியுடையீர்! ஆடீர் ஊஞ்சல்
குணமதுவாங் குன்றேறி நின்றார் தங்கள்
குலங் காக்குந் தேவா! ஒட்டாவா நாட்டில்
மனங்கனிந்து தையல்நா யகியி னோடு
வைதீஸ்வர நாதா! நீர் ஆடீரூஞ்சல்!

[4]

செஞ்சடைமேல் நதியாட மதியும் ஆட
செங்கையில் மான்மறியாட மழுவும் ஆட
நெஞ்சிலணி சரமாலை அணியோடாட
நீள்புலித்தோல் அரையினிலே அசைந்தே ஆட
செஞ்சரண மதிற்சிலம்பு கழலோ டாடத்
தேனோடு நறியமலர் திகழ்ந்தே ஆட
வஞ்சிதையல் நாயகியாந் தேவி யோடு
வளர் ஒட்டாவா வைதீஸ்வர்ரே ஆடீரூஞ்சல்!

[5]



விடமேறு கண்டரே ஆடீரூஞ்சல்
விடையேறுந் திருமகனே அடீரூஞ்சல்
நடமாடும் நாதரே! அடீரூஞ்சல்
நாகமணி கழுத்தழகா ஆடீரூஞ்சல்
கடலாகப் பக்தர்குழாம் தொழுதேநிற்கக்
கன்னிதையல் நாயகியைக் கலந்தேஇந்தத்
திடமான ஒட்டாவா நகரம் மேவும்
திருமலிந்த வைத்தீஸ்வரரே ஆடீரூஞ்சல்!

[6]

ஐம்பூதந் தனைஅடக்கும் வழிதான் காட்டும்
அருள் வடிவமானவரே ஆடீரூஞ்சல்!
செம்பாத சேவைபுரி அன்பர் உள்ளம்
செறிசோதி ஆனவரே ஆடீரூஞ்சல்!
அம்பாக நெடுமால் வில்மலையாய்க் கொண்டே
அவுணர்புரம் அட்டவரே ஆடீரூஞ்சல்
தம்பாதிதரு தையல் நாயகியினோடு
தகும்ஒட்டாவா வைதீஸ்வரரே! ஆடீரூஞ்சல்!

[7]